29th April 1959]

SRI V. SANKARAN : பசுக்கள் அபிவிருத்தி சம்பந்தமாகப் பிரசாரம் செய்வதற்கு மேலாக, வயது வந்த பசுக்களை மாத்திரம் கொலை செய்வதைத் தடை செய்வதற்குப் பதிலாக, சில ராஜ்யங்களில் பரிபூரணமாகப் பசுக்களை கொலை செய்வதைத் தடை செய்திருப்பதுபோல், நம் ராஜ்யத்திலும் பரிபூரணமாக பசுவதையைத் தடுப்பதற்கு சட்டம் கொண்டு வரப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பயன்தரக்கூடிய, உபயோககரமாக இருக்கக்கூடிய மாடுகளைக் கொல்வதற்குத் தடை விதித்து இப்பொழுது சட்டம் இருக்கிறது. அதுவே போதும், அதை வைத்துக் கொண்டே மேலும் மாடுகளை அபிவிருத்தி செய்யலாம்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : சார், பசுக்களையும் கன்றுகளையும் அபிவிருத்தி செய்வது பிளாக் ஏரியாவில் மட்டும் தான் 1–40 p.m. நடைபெறுகிறதா ? அப்படியென்றால் சேலம் ஜில்லாவிலுள்ள பிளாக் ஏரியாவில் இவ்விதம் அபிவிருத்தி பிரசாரம் செய்வதாகத் தெரியவில்லை ? அவ்விதம் பிரசாரம் செய்யப்படுகிறது என்றால் இதற்கு என்று ஆபீஸர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சேலம் ஜில்லாவில் தான் ஹோசூர் இருந்து வருவது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். பிளாக் ஏரியாவில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் இதை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று தான் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

SRI A. VEDARATHNAM : சார், இதற்கு நடைமுறை ஆண்டில் குறிப்பிடத்தகுந்த அளவில் ஏதாவது திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா ? அப்படியென்றால் இதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கன்றுகளை அபிவிருத்தி செய்வதற்காக போடப்பட்டிருக்கிற திட்டத்தில் 1959–60-ல் 2,500 கன்றுகளை சேர்த்துக்கொள்வதாகத் திட்டமிட்டிருக்கிறது, இப்பொது கூடுதலாக ஆயிரம் கன்றுகளை சேர்த்துக்கொள்வது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

Dye Manufacturing Factory

* 246 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் சாய உற்பத்தி சாலை எங்கு நடைபெறுகிறது ?

(ஆ) இல்லையானால் அதை ஏற்படுத்த என்ன முயற்சி எடுக்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There is no factory at present for the manufacture of synthetic dyes in this State.

(*b*) The Government are considering the question of conducting a survey by an expert on the possibilities of manufacturing various dye-stuffs from organic intermediates.

SRI A. VEDARATHNAM : இப்போது நமது நாட்டில் சாய மரங்கள் அதிகமாக இருக்கின்றன, சாயச் சாலைகளும் அதிகமாக இருக்கின்றன. இதன் மூலமாக அவரி போன்ற மரங்களிலிருந்து கெட்டியான சாயங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் ஆராய்ந்து விஞ்ஞான முறையில் இந்தச் சாயத் தொழிலை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த முயற்சிகள் எல்லாம் இப்போது நமக்குக் கிடைக்கவில்லை. பழைய கால முறையில் சாயங்கள் தயாரிக்கலாம் என்பதை எழுதி வைத்திருப்பதோ அல்லது நடைமுறையில் அவற்றை நடத்த முடியுமா என்பதைப்பற்றிய சாத்தியக்கூறுகளைப்பற்றியோ விவரங்களோ கிடைப்பதில்லை. இப்போது சிந்தடிக் கெமிக்கல்ஸ் மூலமாக, டயரக்டர் ஆப் நாஷனல் கெமிக்கல் லாபரட்டரிஸ் அவர்களால் தான் விசாரணை நடத்தப்படுகிறது.

SRI J. MATHA GOWDER : இந்தச் சாய உற்பத்தி செய்வதற்கு நீலகிரி ஜில்லாவில், பல வேர்கள் மூலமாகவும் பட்டைகள் மூலமாகவும் செய்யலாம் என்று இங்குள்ள மக்கள் சொல்லுகிறார்கள். அதைச் சர்க்கார் எக்ஸ்பெர்ட்டை அனுப்பி பரிசீலனை செய்வதற்கு முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கான இப்போது எக்ஸ்பெர்ட் இல்லை, அதிலும் முன் காலத்தில் சாயம் செய்து வந்தது போல் இப்போது செய்வதற்கு இல்லை. இப்போது சிந்தடிக் கெமிக்கல்ஸ் மூலமாகத்தான் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

SRI R. CHIDAMBARA BHARATHI : ஸார், மரங்களினுடைய வேர்களிலிருந்தும் மரங்களுடைய பட்டைகளிலிருந்தும் சாயம் எடுப்பதற்கான விவரங்களைத் தெரிந்திருப்பவர்கள் இருந்தால் அவர்களுடைய ஆலோசனையை சர்க்கார் கேட்டிருக்கிறதா ? அப்பேர்ப்பட்டவர்கள் நாட்டில் இருக்கிறார்களா என்பதை அறிந்து கொள்ளுவதற்கு சர்க்கார் என்ன முயற்சி எடுத்துக்கொண்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதுபற்றி ரிசர்ச் செய்வதற்குத் தகுந்த முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இது சம்பந்தப்பட்ட தொழில் நடத்துகின்றவர்களிடமிருந்து கோரிக்கைகள் ஒன்றும் வரவில்லை. ஆகவே நவீன முறையில் ஆராய்ச்சி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. பட்டைகளைக்கொண்டு சாயம் செய்வதற்கான ஆராய்ச்சி நடத்துவதற்கு இப்போது வழியில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : தலைவர் அவர்களே, சாயப்பொருள் சுலபமான விலைக்கு கிடைக்காமல் ஸொஸைட்டிகளிலிருந்து அதிகமான விலை கொடுத்து விலைக்கு வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த கஷ்டங்களைப் போக்குவதற்காக அரசாங்கம் ஏதாவது புது முயற்சி எடுதிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்குத்தான் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அதற்கான எக்ஸ்பெர்ட்டைத் தரவேண்டும் என்று மத்திய சர்க்காரிடத்தில் கேட்டிருக்கிறோம். அவர்கள் வந்து ஆராய்ச்சி நடத்தியதன் பின்னுல் இதில் வேண்டிய முயற்சிகள் எடுத்துகொள்ளப்படும்.

Industrial Training for Harijans and Ex-Criminal Tribes

* 247 *Q.*—SRI T. VELUCHAMI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-ல் நெல்லை ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கும், மாஜி குற்றப் பரம்பரை வகுப்பாருக்கும் தொழில் கற்றுக் கொடுப்பதற்காக தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) எங்கே ஆரம்பிக்கப்படும் ?